# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 306/2024
## வழக்கு சாட்சி PW-3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சகாயராணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜோசப் | தொழில் | : | பீடி சுற்றும் வேலை |
| கிராமம் | : | நாலாம்குறிச்சி | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 24th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் நாலாம்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மாரி எனது அண்ணி. அ.சா.2 பாஸ்கர் என்னுடைய சகோதரர். 24.12.2021 அன்று இரவு 12.30 மணியளவில் நானும், என்னுடைய அண்ணி மாரியும் எங்கள் ஊர் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது, தெற்கு தெரு தவமணியின் வீட்டு முன்பு வைத்து எதிரி தேவடியா மவளே என்று அவதூறான வார்த்தைகளினால் பேசி என்னுடைய இடது கன்னத்தில் அடித்தார். பின்னர், நான் ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மறுநாள் என்னுடைய அண்ணி மாரியும், அண்ணன் பாஸ்கரும் ஆலங்குளத்திற்கு கறி எடுக்க சென்றபோது, எதிரி அரிவாளால் என்னுடைய அண்ணனை வெட்ட சென்றுள்ளார். என்னுடைய அண்ணன் விலகியுள்ளார். பின்னர், அவர் வயல்வெளியாக ஓடியுள்ளார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.25 11:33:53 +0530